# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2044/2 - 2017 නොවැම්බර් මස 06 වැනි සඳුදා - 2017.11.06

*2044/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின்**
***16 (2ஈ) பிரிவின் கீழான அறிவித்தல்***

*பிரேரிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் மூலம் மீள்நிரப்பப்பட்ட காணியில் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளல் - சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை*

*1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக பத்தரமுல்ல, சுஹுருபாய, 17 ஆவது மாடி எனும் முகவரியில் அமைந்துள்ள நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் மூலம் மீள்நிரப்பப்பட்ட காணியில் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலணைக்காக கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2017.11.06 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).*

*இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான* www.coastal.gov.lk *மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

*(1) மஹாவெலி அபிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு - இல. 500, டி. பி. ஜயா மாவத்த, கொழும்பு 10.*

*(2) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் - புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்த, கொழும்பு 10.*

*(3) கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் - புதிய செயலகம், 3 ஆவது மாடி, மாளிகாவத்த, கொழும்பு 10.*

*(4) தொல்பொருளியல் திணைக்களம் - சேர் மாக்கஸ் பர்னாந்து மாவத்த, கொழும்பு 07.*

*(5) மத்திய சுற்றாடல் அதிகார சபை - "பரிசர பியச" இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.*

*(6) வீதி அபிவிருத்தி அதிகார சபை - டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.*

*(7) சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகாரசபை - பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.*


1A - G 26543 - 27 (2017/11)



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(8) மாவட்டச் செயலகம் - நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.

(9) கொழும்பு பிரதேச செயலகம் - டாம் வீதி, கொழும்பு 12.

(10) கொழும்பு மாநகரசபை - கொழும்பு.

இந்த பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2017.11.06 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

பி. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பதில் பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10.

தொலை பேசி இல. 011-2449754, 011-2449197, 011-2387922.
தொலை நகல் இல. : 011-2438005, 011-2472623.

11 - 910

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.